முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 20ம் தேதி திங்கட்கிழமை
இடைநிலை மனு எண்.8/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.9/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
* * * *

1. சக்கையா தேவர்
2. சந்திரா ... மனுதாரர்கள்/2, 7 பிரதிவாதிகள்

/ எதிர்/

1) பழனியாண்டி ... 1ம் எதிர்மனுதாரர்/ வாதி

2) ராஜு தேவர் (இறப்பு) ... 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

3) பாலு என்ற பாலசுப்ரமணியன்
4) அக்கம்மாள்
5) ராஜலெட்சுமி
6) சாந்தி ... 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இறுதியாக, இம்மனுக்களானது இன்று 20.04.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது,

மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும், இந்நிர் இரண்டு இடைநிலை மனுக்கள், எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதிகள் தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re–open செய்யவும், மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1,2ஐ மீண்டும் recall செய்யவேண்டி கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.</u>**

1.1) மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் முடித்துவைக்கப்பட்ட வாதிகள் தரப்பு சாட்சிகளான வா.சா.1,2ஐ 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டி அசல் வழக்கினை மீண்டும் Reopen செய்யவேண்டியும், அதன் பொருட்டு வா.சா.1,2ஐ மீண்டும் recall செய்ய இந்நிர் இடைக்கால மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) இந்நிர் இடைநிலை மனுக்கள், எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் தங்களது தரப்பு வாதத்தினை நிரூபணம் செய்யும்பொருட்டு சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>2) தீர்வு:–</u>**

2.1) மேற்படி இந்நிர் இடைநிலை மனுக்களை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கில் வா.சா.1, வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனுதாரரர்கள்/2,7 பிரதிவாதிகளால் இந்நிர் இடைநிலை மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 10.04.2026ம் தேதியன்று இந்நிர் 2ம் மனுதாரர்/7ம் பிரதிவாதியால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே அதன்பொருட்டு இந்நிர் மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகளால் வாதி தரப்பு சாட்சிகளான வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியம் என்றும், அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யாவிட்டால் இந்நிர் மனுதாரர்களுக்கு இழப்பு ஏற்படும் என்றும், எனவே இந்நிர் இடைநிலை மனுக்களை அனுமதித்து மேற்படி வாதி தரப்பு சாட்சிகளான வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், அசல் வழக்கானது கடந்த 2008ம் ஆண்டு 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் இந்நிர் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச்சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை

செய்யக்கோரியும், அதன்தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை இந்நிர் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கவேண்டியும் தாக்கல் செய்யப்பட்டு 2008ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், அசல் வழக்கானது இருதரப்பு சாட்சிகள் விசாரணையானது கடந்த 15.07.2025ல் முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது.

2.3) ஆனால், வாதி தரப்பில் வா.சா.2 ஆனவர் கடந்த 24.01.2025ல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னிட்டு, அசல் வழக்கானது சாட்சிகளின் குறுக்கு விசாரணைக்காக கடந்த 07.02.2025, 19.02.2025, 06.03.2025, 25.03.2025 ஆகிய தேதிகளில் வாய்தாக்கள் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்நிர் 1ம் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தால் மேற்படி வா.சா.2ன் சாட்சியமானது கடந்த 25.03.2025ல் இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

2.4) பின்னிட்டு, சுமார் 5 மாதங்கள் கழித்து கடந்த 14.08.2025ம் தேதியன்று மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ மனுதாரர்கள் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு மீண்டும் வழக்கு விசாரணையை re-open

செய்து வா.சா.1,2 மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இடைநிலை மனு எண்.3/2025 மற்றும் இடைநிலை மனு எண்.4/2025 தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு, அன்றைய தினமே இரண்டு மனுக்களும் நிபந்தனையின்பேரில் அனுமதிக்கப்பட்டது.

2.5) பின்னிட்டு, 01.09.2025ம் தேதியன்று வா.சா.1 ஆனவர் 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காக கடந்த 08.09.2025ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வா.சா.2 குறுக்கு விசாரணைக்காக 08.09.2025ல் மீண்டும் ஆஜரானபோது, இந்நிர் 1ம் மனுதாரர்/2ம் பிரதிவாதியால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இந்நிலையில், 11.09.2025ம் தேதியன்று வா.சா.2ன் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டுள்ளது.

2.6) இந்நிலையில், 1ம் மனுதாரர்/2ம் பிரதிவாதியால் வா.சா.2ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு 2வது முறையாக கடந்த 17.09.2025ம் தேதியன்று கட்டளை 18 விதி 17ன் கீழ் மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது

கடந்த 21.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2.7) இந்நிலையில், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய இம்மனுக்களானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 3வது முறையாகவும், வா.சா.1ஐ குறுக்குவிசாரணை செய்ய 2வது முறையாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகளுக்கு வாதி தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும், பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1,2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு முன்வராத நிலையில், இந்நீதிமன்றத்தால் சாட்சி விசாரணையை முடித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இம்மனுக்களில் கூறிப்பிட்டுள்ள காரணங்கள் சட்டப்படியாக ஏற்கத்தக்கதாக இல்லை என்பதாலும், இந்நிர் 2,7 பிரதிவாதிகளுக்கு ஒரே வழக்கறிஞர் அசல் வழக்கில் ஆஜராகியுள்ள நிலையினை கருத்தில்கொண்டும், 2ம் பிரதிவாதியும், 7ம் பிரதிவாதியும் சேர்ந்தே இந்நிர் இடைநிலை மனுக்களை தாக்கல் செய்துள்ள நிலையினை கருத்தில்கொண்டும், மேற்படி அசல் வழக்கு விபரங்கள் அனைத்தும் 2ம் மனுதாரர்/7ம் பிரதிவாதிக்கு தெரியும் என்று கூறியபோதும், மேற்படி வா.சா.1, வா.சா.2ஐ விசாரிக்கவேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனுக்களில் மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ விசாரணை செய்ய

தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுக்களை மறைத்து இம்மனுக்கள் தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ 7 பக்கத்திற்கு ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்துள்ளதை கருத்தில்கொண்டும், தற்போது எதற்காக மீண்டும் வா.சா.1,2ஐ குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிடாத நிலையிலும், வா.சா.1,2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்பு அளித்துள்ளதை கருத்தில் கண்டும், அசல் வழக்கானது கடந்த 2008 முதல் நிலுவையில் இருப்பதை கருத்தில் கொண்டும், இந்நிர் மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் இந்நிர் அசல் வழக்கில் நடந்த மேற்படி சங்கதிகளை மறைத்து இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளதை கருத்தில்கொண்டும், இம்மனுக்களானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கினை காலம் கடத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் கூறும் வாதத்தினை கருத்தில்கொண்டும், இம்மனுக்களானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இந்நிர் இடைநிலை மனுக்களானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 20.04.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.20 18:30:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

<u>இணைப்பு</u>:–

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.20 18:30:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.8/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.9/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
செவ்வை உத்தரவு
நாள் : 20.04.2026